

அமரர்

# உயர்திரு முருகேசு சுப்பிரமணியம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

02.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு மலர்



நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரம் வெடியரசன் கோட்டையடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய

அமரர் உயர் திரு

## முருகேசு சுப்பிரமணியம்

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்த

நினைவுமலர்

**02.12.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாக இருந்து
தங்களையே உருக்கி ஒளியூட்டிய,
எங்களின் ஆருயிர்த்
தெய்வங்களின் இனிய
நினைவுகளை நெஞ்சில் சுமந்த
வண்ணம் இம்மலரை அவர்களின்
பாதக் கமலத்தில் பதித்து
பணிந்து
காணிக்கையாக்குகின்றோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
|---|---|---|---|
| 24.08.1920 | 02.11.2011 | 12.08.1924 | 19.02.2009 |

மறைந்தும் மறையாத ஒளிவிளக்குகள்

அமரர்கள்

# திரு. திருமதி. சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை

அவர்களின்

**திதி வெண்பா**

ஆண்டு கர வருடம் கார்த்திகை இரண்டுதனில்
பூண்டநல்ல பூர்வபக்க சப்தமியில்
ஆண்டகையான் ஆவூரான் சுப்பிரமணியன்
சிவனடியே சேர்ந்தான்

**திதி வெண்பா**

ஆண்டு விரோதிதனில் ஆனநல் மாசிபத்தொன்பதில்
தூண்டு வியாழன் துளிர்விடு பூர்வபக்க தசமிதனில்
பெற்றம்பதிவாழ்ந்த பேருடையான் பார்வதிப்பிள்ளையவள்
தஞ்சை பெருஉடையந் தாழ் சேர்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே.

விநாயகனே வெவ்வினை வேர றுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம் ஆர்க்கும் குடியல்லாத் தன்மை ஆன
சங்கரன் நல்சங்க வெண்குழை ஒர்காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சேவடி இணையே குறுகினோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரிவாயே.

## திருவிசைப்பா

இடர் கெடுத்தென்னை ஆண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற வெறிற் தெழுந்த
சுடர் மணிவிளக்கின் உள்ளொளிவிளங்கும்
தூய நற்சோதி யுட்சோதி
அடல்விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றானைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

சொலாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேலுன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போது உன் அடியில் கீழ் இருக்க என்றார்.

# திருப்புகழ்

உம்பர் தருத் தேனும்மணிக் கசிவாசி
ஒண் கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு மேற்கு,

கரமத்தைப் பதியில்

திருக்கோவில் கொண்டெழுந்தருளிய

**ஸ்ரீ முருகவடிவேற் பெருமான்மீது**

பாடப்பட்ட

# ஸ்தல புராணம்

[redacted]

**அமரர் பண்டிதர் ஆ. சுப்பிரமணியம் (செல்லத்துரை)**

தலைமை ஆசிரியர் அவர்களின் ஆக்கம்

**காப்பு**

விக்கின விநாயகனே வேழமுகத் தைங்கரனே
புக்குவளர்வார் பூந்தி புகுபவனே - நெக்குருகி
கந்தன்மேல் நாயேன் கவிபாட எந்தனுக்கு
வந்துதவி செய்வாய் மகிழ்ந்து.

எந்தமது சிந்தைபிரியாத பெருமானென இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்ய வளர்தூப மொடுதீபம் நிகழ்வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
கந்து கடல்சூழ் நெடுந்தீவுதனில் மேவுபதி கரமத்தையதுவே.

கருணையே வடிவமான கண்கள் பன்னிரண்டி னாலே
இருவினை களைந்த மேலோர்க்கினிய வானந்த மெல்லாம்
வரன்முறை பெருக்கி அன்னான் மனமெனுங் கோயிற்றூண்டாத்
திருவிளக் கொளியாய் வைகும் திருக்கரமத்தை முதலே போற்றி.

போற்றியெம் பெருமபோற்றி புரந்தரற் கபயங் காத்து
கூற்றெனும் கொடியசூரைக் குலத்தொடும் அழித்தாய் போற்றி
நாற்றிசை புகழும் நன்னீர் நாடெனும் கரமத்தையுள்
போற்றினர்க் கருளும் வண்ணம் புகுந்துறை குமரா போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தனே போற்றி எந்தன் கரமத்தை முதலே போற்றி
சிந்தையின் நிறைவே போற்றி திகழ்ஒளி வடிவே போற்றி
அந்தமில் அவுணர்தம்மை அழித்திட்ட அமர போற்றி
வந்துனை அடைந்தோர்க் கெல்லாம் வாழ்வருள் மருந்தே போற்றி.

வள்ளிதன் மணாளா போற்றி மதகரி யுரித்த பெம்மான்
தெள்ளொளி விளங்கும் ஞானத் திருவிழி யதனிற் றோன்றி
[redacted]யில்
அள்ளிநற் கருணை வீசும் அருட்பெருள் கடலே போற்றி.

நண்ணுதற் கினியாய் போற்றி நலங்கெழு தெய்வயானை
கண்ணுறப் பொருந்தும் வண்ணம் கலந்துறை குமரபோற்றி
விண்ணுறை தலைவன் ஏத்தும் வேற்படை விமலா போற்றி
கண்ணுதற் பெருமான் நல்கும் கரமத்தைக் கந்தாபோற்றி.

சிந்தனைக் கரியாய் போற்றி திகழறு முகத்தாய்போற்றி
வந்துனை அடைந்தோர்க் கெல்லாம் வரமருள் மருந்தே போற்றி
பந்தம தகலா நாயேன் படுந்துயர் களைவாய் போற்றி
கந்தனே போற்றி எந்தன் கரமத்தை முதல்வபோற்றி.

பன்னிரு கரத்தாய் போற்றி பதமலர் தொழுவோர்க்கெல்லாம்
முன்னிரு வினைகள் தீர்க்கும் முகமுடை முதல்வபோற்றி
என்னிரு வினைகள் தீர்க்க எழில்நிறை கோயிலூடு
தன்னிக ரில்லாத தேவன் தங்கிய தகைமைத்தென்னோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நெடுந்தீவு மேற்கு,

கரமத்தைப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய

ஸ்ரீ முருகவடிவேற் பெருமான் பேரில் பாடிய

# திருவூஞ்சல்

[redacted]

அமரர் பண்டிதர் ஆ. **சுப்பிரமணியம்** *(தலைமை ஆசிரியர்)* **அவர்களின் ஆக்கம்**

## காப்பு

*மன்றில் நடமாடுகின்ற மகிபன் தன்பால்*
*வானவர்கள் இரங்கிநின்று வழுத்துங்காலை*
*கன்றுகனல் விழியதனில் கடிதிற் தோன்றி*
*கந்தனெனும் பேர்படைத்த கடவுள் தன்மேல்*
*சென்றுதொழும் அடியார்கள் சிறந்துவாழ*
*செம்பொன்செய் ஊஞ்சலிடை சிறியேன்பாட*
*கொன்றைமலர் சடைமுடித்த பெருமான் நல்கும்*
*குஞ்சரமாம் ஐங்கரன்தாள் காப்பதாமே.*

## ஸ்ரீ முருகவடிவேற் பெருமான்
## திருவூஞ்சல்

*வாசுகி கார்க்கோட சங்கபால பதமனெனும்*
*நாக மவை தூண தாக*
*வலிமைமிகு தக்கனுயர் விட்டமாக*
*தேசுநிறை குளிகனவன் பருநாணாக*
*திருவிளங்கும் அனந்தனுயர் பலகையாக*
*பாசுரர்கள் போற்றும் கலைவாணி கேள்வன்*
*பண்பினுடன் நன்கமைத்த ஊஞ்சல் வைகி*
*பூசுரர்கள் தொழுதேத்திப் புகழும் வண்ணம்*
*பொலிவுடைய அறுமுகனே ஆடீரூஞ்சல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கதிரும் தண்கதிரும் கவிகை தாங்க
வெற்றிநிறை சமன்நிருதி யாலவட்டம் பற்ற
பொங்குதிரை காவிரியைப் புவியிற் கொண்ட
புண்ணியனா மிந்திரன் காளாஞ்சி யேந்த
தங்குபுகழ் நிதிக்கிறைவன் அடப்பை தாங்க
தாரணியோர் புகழ்வருணன் சாமரைகள் வீச
பொங்குதிரை கடல்சூழும் நெடிய தீவில்
புகுந்துறையும் புண்ணியனே ஆடீ ரூஞ்சல்.

கலைமகளும் திருமகளும் களிப்பினோடு
கவிநிறையும் பொன்னூஞ்சல் வடந்தொட்டாட்ட
மலைமகளாம் உமைகண்கள் குளிர நோக்க
மாலவனும் மலரவனும் வணங்கி யேத்த
தலைமைபெறு பிரணவத்தின் பொருள்கள் ஆயா
சதுர்முகனைச் சிறைப்பிடித்த தன்மை உன்னி
அலைதிகழும் நதிமுடித்தோன் அருளில் நோக்கும்
அன்புருவே கரமத்தைக் கதிபதியே ஆடீ ரூஞ்சல்.

இந்திரனும் இமையவரும் இறைஞ்சி ஏத்த
எம்பெருமான் எழில்விழியில் இலங்கித் தோன்றி
சுந்தரஞ்சேர் சரவணத்துட் தூநீராடி
சூரனுடல் கிழித்தமர் துயர்கள் தீர்த்து
கந்தமலை தனில்மேவிக் கழிப்பில் நீங்கி
கரமத்தை யெனும்பதியே கருத்திற் கொண்டு
வந்துதொழு மடியார்கள் வாழ வைகும்
வண்ணமுகத் தறுமுகனே ஆடீ ரூஞ்சல்.

பார்ஏத்தும் ஏர்பிடிக்கும் உழவ ரார்ப்ப
பங்கையங்கள் நிறைதடத்துக் கயல்கள் துள்ளி
தார்ஏற்றும் தருவினிறால் கிழிக்கச் செந்தேன்
தண்ணருவி வெள்ளமென்றும் தணந்து போந்து
பேராற்றும் வளத்தினுயர் நெடிய தீவில்
பெருமைதிகழ் கரமத்தைப் பதியில் வாழும்
போராற்றல் படைத்துடைய பொருளே எங்கள்
புண்ணியனே அறுமுகனே ஆடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணபிரான் செய்ததவப் பயனில் வந்த
கன்னியராம் வள்ளிதெய்வ யானை சூழ
வண்ணமயில் வாகனமேல் வடிவே லேந்தி
வருமுருகா உனதுபதம் அபய மென்றே
எண்ணிறந்த பக்தர்குழாம் இரங்கி யேத்த
எழில் திகழும் கரமத்தைப் பதியில் மேவி
வண்ணநிறை பொன்னூசல் மருவியாடும்
மலைமகள்தன் திருமகனே ஆடீ ரூஞ்சல்.

தேனமர் பூங்காவிலுறை தேவ ரேத்த
செந்தேனின் இசைநிறை தும்புரு நாரதர்கள்பாட
ஊனமிலா முனிவர்கணம் இரங்கி நிற்ப
எழில்நிறையும் மாதர்குழாம் இறைஞ்சி யேத்த
வானமுயர் சோலைதிகழ் நெடிய தீவில்
வளம்நிறைநல் கரமத்தைப் பதியில் வாழும்
கானவர்கோன் திருமகளைக் கலவி கொண்டோய்
கண்ணுதல்தன் நன்மகனே ஆடீ ரூஞ்சல்.

தார்நிறையும் விண்ணவர் பூமாரி மூடச்
சன்மார்க்க சைவநெறி தழைத்து ஓங்க
ஏர்நிறையும் கூந்தருவர் கீதம் பாட
எழில் நிறையும் மாமகளிர் நடனமாட
பார்நிறையும் மறைவாணர் வேத மோத
பந்தமெலாந் தொண்டர்தமைப் பற்றா தோட
கார் உலவும் பூஞ்சோலை மருவி வாழும்
கரமத்தைத் திருமுருகா ஆடீ ரூஞ்சல்.

இம்மையினில் சூழிடர்கள் யாவும் நீங்கி
இருப்பவரே இறைவர்பத மடைவா ரென்ற
செம்மைநிலை யறியாத பிதட ரோடும்
திரிந்துழலும் அடியேனைத் திருத்தி மாற்றால்
கம்மெனும்நீர் கடல்சூழ்ந்த நெடிய தீவில்
கரமத்தை எனும்பதியிற் கழித்து வாழும்
அம்மையுமை திருமகனாய் அவனி யேத்தும்
அறுமுகனாம் திருமுருகா ஆடீ ரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணிந்தோன் திருமகனே ஆடீ ரூஞ்சல்
அருள் விளங்கும் அறுமுகனே ஆடீ ரூஞ்சல்
பேறறிந்து தவமுயல்வோர் பெருமை நாடும்
பெம்மானே திருமுருகா ஆடீ ரூஞ்சல்
கூறரிய குஞ்சரத்துக் கிளைய கோவே
குறமகள்தன் மணவாளா ஆடீ ரூஞ்சல்
நீறணிந்து தொழுமடியார் நிறைந்து வாழும்
நெடுந்தீவுக் கொருமுதலே ஆடீ ரூஞ்சல்.

## வாழி

கோலமயில் வாகனமும் குலவி வாழி
குக்குடமாம் கொடியகனும் கூடி வாழி
சீலம்நிறை வேதியர்கள் செழித்து வாழி
செந்தமிழின் இன்னிசையும் சிறந்து வாழி
ஆலமணி மிடற்றிறைவன் அன்பிற் றந்த
அறுமுகனார் அடியவர் எந்நாளும் வாழி
தாலம்நிறை நெடுந்தீவுப் பதியும் வாழி
சண்முகனார் திருப்பதியும் தழைத்து வாழிவாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை



தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

## நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிரும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெகுண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் மருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரிய அளித்து
மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் செயலது அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனது உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள எந்தன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டிக் கவசம் முற்றிற்று
திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அனைத்து உயிரினங்களும், அம்மாவின் வழித்தோன்றல்களே! அவை, அம்மாவின் ஊட்டுதல் இன்றி வாழ்வு பெறமுடியாது. சீவராசிகள் அனைத்தும், அம்மாவின், அன்பினால் ஈர்க்கப்பட்டவைகளே! தாவர வர்க்கங்களிற்கூட, அம்மாவின் அருங்குணங்கள் காணப்படுவது விஞ்ஞானத்தின் முடிபாகும். அம்மாவின் அரவணைப்பில் வாழ்வன என்பதை, அவற்றின் வாழ்க்கை அமைவின் மூலம் அறிகின்றோம். ஆறுதல் கூறி, ஆசீர் அளிப்பவளும் அவளே! ஈற்றில், இறைவனது பாதம் வரையும் அவர்களை வழிநடத்துபவளும், அம்மா என்பது வெளிப்படையாகும்.



அம்மா! எங்கள் அம்மா!
அமுதம் ஊட்டும் அம்மா!
அனைத்தும் தந்திடும் அம்மா!
அணைத்துக் காத்திடும் அம்மா!

முத்தம் தந்திடும் அம்மா!
முதுகிற் சுமந்திடும் அம்மா!
முத்தமிழ் உரைத்திடும் அம்மா!
மூதுரை வழங்கிடும் அம்மா!

ஆண்டவன் அருளே! அம்மா!
அனைத் துயிர் முதலே! அம்மா!
ஆற்றல் அளிப்பவள் அம்மா!
ஆனந்தம் கொள்பவள் அம்மா!

படைப்பின் சிகரம் அம்மா!
பதியாய் வாழ்பவள் அம்மா!
பணிவை அளிப்பவள் அம்மா!
பண்பின் இருப்பிடம் அம்மா!

பக்குவம் அடைந்தவள் அம்மா!
பக்தியை வளர்ப்பவள் அம்மா!
பாலரைக் காப்பவள் அம்மா!
பாரினை வளர்ப்பவள் அம்மா!

ஆறுதல் கூறிடும் அம்மா!
ஆசீர் அளித்திடும் அம்மா!
ஆண்டவன் பாதம் தொழுதிடவே!
ஆரம்பம் தருபவள் அம்மா!

"நன்றி"
ஆசிரியர் சு. அடைக்கலம்
சிறுவர் பாமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தின் பகுதிகள்

பிள்ளைகள், பத்தின் பகுதிகளைப் பாட்டின் வரிகளிற் கற்பதன் மூலம் ஆரம்ப கணித அறிவுக்குரிய கூட்டல், கழித்தற் செயல்களைத் தமது கை விரல்களை உபயோகித்து எண்ணுதலைத் தவிர்க்கும் பயிற்சியாகக் கருதியே இப்பாடற் பயிற்சி வழங்கப்படுகிறது.

ஒன்றும், ஒன்பதும் பத்து;
ஒன்றே தெய்வம் பற்று.

இரண்டும், எட்டும் பத்து;
இரந்து திரிவது பித்து.

மூன்றும், ஏழும் பத்து;
முன்னேற்றத்தின் வித்து.

நாலும், ஆறும் பத்து;
நமக்கு நல்ல சொத்து.

ஐந்தும், ஐந்தும் பத்து;
ஐயம் அற்ற கூற்று.


ஆறும், நாலும் பத்து;
ஆறறிவே நம் சித்து.

ஏழும், மூன்றும் பத்து;
ஏழை முன்னே முத்து.

எட்டும், இரண்டும் பத்து;
எண்ணி இரண்டு சுற்று.

ஒன்பதும், ஒன்றும் பத்து;
ஒன்றாய் இணைந்து பயிற்று.

ஒன்றாய்க் கூடிப் பாடு;
ஒன்றாய் வாழப் பழகு.




*"நன்றி"*
*ஆசிரியர் சு. அடைக்கலம்*
*சிறுவர் பாமாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பலகை

காலாதி காலமும், நாம் கற்றற்கு; ஓர் உன்னத பங்களிப்பைக் கரும்பலகையே வழங்கி வருகிறது. இப்படிப்பட்ட ஓர் உத்தம சேவையை ஆற்றும் கருவியை; நாம், எமது நினைவில் என்றும் நினைவுறுவோம். நமது பாரம்பரியத்தின் கற்றல் முயற்சி களுக்கு எல்லாம், வழி சமைத்து உதவிய; மற்றைய, அனைத்துக் கருவிகளது சேவைகளையும் அன்று முதலே விஞ்சியதாய்; இன்றும் தனது சேவையில் நிலைத்து நின்று பணியது புரிவது கரும்பலகையே! எனவே, அவளை என்றும் அகமதிற் சுமப்பதே நம் கடனாம்.

கரிய நிறத்துப் பலகை - எமக்குக்
கருத்தை விளக்கும் பலகை



கடின மரத்துப் பலகை - எவர்க்கும்
படிக்க உதவும் பலகை

எண்ணும், எழுத்தும் சிறக்க - என்றும்
இணக்கம் காட்டும் பலகை

எண்ணற்றோர்கள் சிறக்க - வாழ்வில்
ஏற்றம் காட்டும் பலகை.

ஆசான் கையின் எழுத்தை - மிக்க
அன்பாய்ச் சுமக்கும் பலகை

ஆசையோடு நாமும் - அகம்
அங்கே சுமப்போம் அவளை.


*"நன்றி"*
*ஆசிரியர் சு. அடைக்கலம்*
*சிறுவர் பாமாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்பெட்டி

தபாற்பெட்டியின் தேவையும், அதன் சேவையும்; மனிதர் எமக்கு எத்தனை அவசியமானது! நேர அட்டவணையைத் தானே தாங்கிய வண்ணம்; நாம் அதனுட்போடும் கடிதங்களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பாதுகாத்து உரியவர்கள் அவற்றைச் சேகரிப்பதற்குப் பெரிதும் உதவுகின்றது. எல்லோரதும் நம்பிக்கைக்கும் உரியதான அப்பெட்டி; பேதமை இன்றி, அனைவரது கடிதங்களையும் ஏற்றுக்கொள்ளுகிறது. உரிய இடங்களை, நாம் அனுப்பும் கடிதங்கள் சென்று அடைவதற்கு, அது ஒத்துழைப்புத் தருகின்றது. எல்லோரதும் நம்பிக்கைக்குரிய சேவையாளன் அவனல்லவா?

சிகப்பு வர்ணப் பெட்டி – நமது
தெருவில் உள்ள பெட்டி




எவர்க்கும் உதவும் பெட்டி – கடின
இரும்பிற் செய்த பெட்டி.

திறந்து பூட்டும் நேரம் – நமக்குத்
தெரியக் காட்டும் பெட்டி.

சிறந்த முறையில் மக்கள் – நம்பும்
சீர்மை வாய்ந்த பெட்டி.

மழையை, வெயிலைத் தாங்கும் – மிக்க
வலிமை யுடைய பெட்டி.

எழுதிப் போடும் கடிதம் – எல்லாம்
ஏற்கும் தபாற் பெட்டி.

"நன்றி"
ஆசிரியர் சு. அடைக்கலம்
சிறுவர் பாமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையின் இனிய நூல்கள்

தமிழ் மூதாட்டி ஔவை, நமக்கு அளித்துள்ள; நல்ல சொத்துக்கள். அவரது நூல்கள், தமிழ்த் தாயை என்றும் நீதியுடனும், மகிழ்வுடனும் வாழக் காண்பதற்காக; அவரால் ஆக்கப்பட்டவையாகும். ஏனெனில், அவை உலக நீதியைக் கற்கவும்: அவற்றின்படி வாழவும் நமக்கு அறிவூட்டுகின்றன. திருக்குறளுக்கு அடுத்ததாக விளங்கும் நீதி நூலாகவும், ஒழுக்க நூலாகவும் இவை விளங்குகின்றன. அனைவருக்கும் வழிகாட்டும் ஊடகமாகவும் அமைந்து; எம்மை, மனிதத்தை மதித்து வாழும்படி நெறிப்படுத்துகின்றன.



ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
அருமை மிக்க நல்வழி
அருமை மிக்க நல்வழி

நீதிவெண்பா நிதமும் எமக்கு
நீதி சொல்லும் நன்நெறி
நீதி சொல்லும் நன்நெறி;



உலக நீதி ஔவை சொன்ன
உண்மை நூலாம் மூதுரை
உண்மை நூலாம் மூதுரை;

இவைகள் எல்லாம் இனிய நூல்கள்,
என்றும் இவற்றைக் கற்றிடு
என்றும் இவற்றைக் கற்றிடு;

ஔவைப் பாட்டி அமைத்துத் தந்த,
அளவிற் சிறிய நூல்களை,
இளமை யதனில் இனிது கற்போம்,
இனிது கற்போம் அனைவரும்.

*"நன்றி"*
*ஆசிரியர் சு. அடைக்கலம்*
*சிறுவர் பாமாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக்குருவி



சிட்டுக் குருவி , கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே!

கட்டிப் போட்டு வைக்கமாட்டேன்.
கவலைப் பட்டு ஓடவேண்டாம்.
பட்டம் போல வானை நோக்கிப்
பறந்து, ஓடி அலையவேண்டாம்.

சிட்டுக் குருவி , கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே!

வட்ட மிட்டுத் திரியவேண்டாம்.
மழையில் எல்லாம் நனையவேண்டாம்.
வெட்ட வெளியில் சுற்ற வேண்டாம்.
வெய்யில் தாக்க அலையவேண்டாம்.

சிட்டுக் குருவி , கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே!

பட்டு உடலைத் தொட்டிடுவேன்.
பையப் பயை நெருங்கிடுவாய்.
தட்டு நிறைய நெல் தருவேன்.
தயவு செய்து வந்திடுவாய்.




சிட்டுக் குருவி , கிட்டவா.
எட்ட ஓடிப் போகாதே!

*குழந்தைக் கவிஞர்*
*அழ.வள்ளியப்பா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த இடம்




அப்பா என்னை
அழைத்துச் சென்றார்.
அங்கே ஓரிடம்
அங்கிருந்த
குயிலும், மயிலும்
ஆடித் திரிந்தன.



பொல்லா நரியும்,
புனுகு பூனை
எல்லாம் நின்றன.

குட்டி மான்கள்,
ஒட்டைச் சிவிங்கி
கூட இருந்தன.



குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்துக்
'குறுகு' றென்றது.

யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது.



முதலை தலையைத்
தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது.
கரடி கூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று!

சிறுத்தை ஒன்று
கோபத்தோடு
சீறிப் பார்த்தது!



அங்கு எங்கள்
அருகிலேயே
சிங்கம் நின்றது!

கரடி, சிங்கம்,
புலியைக் கண்டேன்;
கண்டும் பயமில்லை.

சூர னைப்போல்
நின்றிருந்தேன்;
துளியும் பயமில்லை!



சென்ற அந்த
இடம் உனக்குத்
தெரிய வில்லையா?

மிருகக் காட்சி
சாலை தானே!
வேறொன்றும் இல்லை!



குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக்கூடம் திறக்கும் காலம்



பள்ளிக்கூடம் திறக்கும் காலம்.
பாலர் பையைத் தூக்கும் காலம்.

மணியின் ஓசை கேட்கும் காலம்
மாண வர்கள் கூடும் காலம்.

வாத்தி யாரைப் பார்க்கும் காலம்
வகுப்பு மாறி இருக்கும் காலம்.


புத்தகங்கள் வாங்கும் காலம்.
புரட்டிப் புரட்டிப் பார்க்கும் காலம்.

பரீட்சை தன்னில் தேர்ச்சி பெற்ற
பாலு ஜோராய் நடக்கும் காலம்.

தோற்றுப் போன கோபு மூஞ்சி
தொங்கிப் போச்சு, ஐயோ காலம்!

*குழந்தைக் கவிஞர்*
*அழ.வள்ளியப்பா*

## பசுவும் கன்றும்




தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி

அம்மா என்குது
வெள்ளைப் பசு - உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி



நாவால் நக்குது
வெள்ளைப் பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது
கன்றுக்குட்டி.




முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு - மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி

*நன்றி*
*"மலரும் மாலையும்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காக்காய்



காக்காய்! காக்காய்! பறந்து வா!
கண்ணுக்கு மை கொண்டு வா;
கோழி! கோழி! கூவிவா;
குழந்தைக்குப் பூக் கொண்டு வா;
வெள்ளைப் பசுவே! விரைந்து வா;
பிள்ளைக்குப் பால் கொண்டு வா;

நன்றி
*"மலரும் மாலையும்"*

## சேவற் கோழி

கோழி! கோழி! வா வா;
கொக்கோ கோ என்று வா ;
கோழி! ஓடி வா வா;
கொண்டைப் பூவைக் காட்டவா.

குத்திச் சண்டை செய்யவோ?
குப்பை கிண்டி மேயவோ?
கத்திபோ லுன் கால்விரல்.
கடவுள் தந்து விட்டனர்!

காலை கூவி எங்களைக்
கட்டில் விட் டெழுப்புவாய்;
வேலை செய்ய ஏவுவாய்;
வெற்றி கொண்ட கோழியே!




நன்றி
*"மலரும் மாலையும்"*

## நாய்



வீட்டு வாசல் காப்பவன்
வேட்டை யாட வல்லவன்
ஆட்டுக் கிடைப் பாண்டியன்,
அன்பு மிக்க தோழன்.
உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்.
மண்ட லத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ?



நன்றி
*"மலரும் மாலையும்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகக் கணிதம்

01) 9 என்னும் எண்ணை ஆறுதடவைகள் பயன்படுத்தி அவற்றைக் கூட்டியோ, கழித்தோ, பெருக்கியோ, பிரித்தோ அன்றி அடுத்தடுத்து எழுதியோ 100 என்ற விடை பெறும் வழியைக் காண்க.

02) மூன்று எண்ணைக் கூட்டும்போதும், அதே மூன்று எண்களைப் பெருக்கும்போதும் பெறப்படும் விடைகள் சமனாகும். அம்மூன்று எண்களையும் காண்.க

03) 1 என்னும் இலக்கத்தை நான்கு தடவைகள் மட்டும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகப்பெரிய எண் யாது?

04) ஒரு குடும்பத்தில் தந்தை, மகள் உண்டு. தாய், மகன் உண்டு. கணவன், மனைவி உண்டு. அண்ணன், தங்கை உண்டு. இக்குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களின் அதிகுறைந்த எண்ணிக்கை எவ்வளவு?

05) குமாரிற்கு 4 மகன்கள் உள்ளனர். ஒவ்வொரு மகனிற்கும் ஒரு தங்கை உண்டு. குமாரிற்கு மொத்தம் எத்தனை பிள்கைள்?

06) செல்வனிற்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனரோ அத்தனை சகோதரிகள் உள்ளனர். செல்வனின் தங்கை துஷ்யந்திக்கோ எத்தனை சகோதரிகள் உள்ளனரோ அதைப்போல் இரு மடங்கு எண்ணிக்கையான சகோதர்கள் உள்ளனர். அக்குடும் பத்தில் ஆண்பிள்ளைகள் எத்தனை? பெண்பிள்ளைகள் எத்தனை?

07) ஒரு கிலோ பஞ்சா, ஒரு கிலோ இரும்பா பாரம் கூடியது?

08) ஒரு முட்டை அவிப்பதற்கு 3 நிமிடங்கள் செல்லும், 5 முட்டைகள் அவிப்பதற்கு எத்தனை நிமிடங்கள் செல்லும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) ஓர் இருட்டறையில் வெள்ளை, கறுப்பு, நீலம், பச்சை ஆகிய நான்கு நிறங்களில் தொகையான காலுறைகள் குவிக்கப் பட்டுள்ளன. ராஜா அவசரமாகப் பாடசாலை விழா ஒன்றிற்குச் செல்வதற்கு யாதாயினும் ஒரு நிறத்தில் இரு காலுறைகளை எடுக்க விரும்புகிறான். வெளிச்சம் எதுவும் இல்லாத நிலையில் அவன் அறையினுள் சென்று ஆகக் குறைந்தது எத்தனை காலுறைகளை எடுத்து வந்தால் யாதாயினும் ஒரே நிறத்தில் இணைடைப் பெற முடியும்?

10) 5 மனிதர் 5 கார்களை 5 மணித்தியாலங்களில் கழுவர். எத்தனை மனிதர் 30 கார்களை 30 மணித்தியாலங்களில் கழுவுவர்?

11) எமது வீட்டுச் சேவல் அடுத்த வீட்டில் முட்டை இட்டால் அந்த முட்டை யாருக்குச் சொந்தம்?

12) முட்டைகளின் விலை 10% குறைந்தபோது ரூ 720 இற்கு 8 முட்டைகள் கூடுதலாக வாங்க முடிந்தது எனின் விலை குறைந்தபோது ஒரு முட்டையின் விலையகைக் காண்க.

13) ஒரு கிணற்றின் உள்ளே ஒரு தவளை உண்டு. அது கிணற்றை விட்டு வெளியே வரவிரும்பியது. கிணற்றின் சுவர் அழுத்த மாக இருந்தது. இதனால் தவளை மேல்நோக்கி ஒரு பாய்ச்ச லில் 3 அடி பாய்ந்தால் 1 கீழ்நோக்கி வழுக்குகின்றது. கிணற் றின் ஆழம் 23 அடி எனின் அத் தவளை எத்தனையாவது பாய்ச்சலில் கிணற்றை விட்டு வெளியேற முடியும்?

14) பிச்சைக்காரன் ஒருவன் குடித்துவிட்டு வீசப்பட்ட சிகரட் துண்டுகள் நான்கைப் பொருத்தி ஒரு சிகரட்டாக்கிப் புகைப்பது வழக்கம். இவ்வாறு அவன் ஒரு நாளைக்கு 3 சிகரட் புகைப்பான். இவ்வாறு அவன் புகைப்பதற்கு ஒரு நாளைக்கு ஆகக்குறைந்தது எத்தனை துண்டுகள் தேவைப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) தந்தை, தாய், மகன், மூவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் புதுவருட கைவிசேஷம் ஆளுக்கு ரூ 100 வீதம் கொடுப்பதற்கு எத்தனை ரூபாய் தேவை?

16) ஒரு தாமரைக் குளத்தில் உள்ள பூக்களில் அக்குளத்திலுள்ள தவளைகள் ஒவ்வொரு பூவிலும் ஒன்றாக ஏறி அமர்ந்தன. அப்போது ஒரு தவளைக்குப் பூ எதுவும் கிடைக்கவில்லை. சிறிது நேரத்தில் ஒவ்வொரு பூவிலும் இரு தவளைகள் வீதம் ஏறி அமர்ந்தன. அப்போது ஒரு பூ மீதமாக இருந்தது. அப்படியானால் அக்குளத்தில் எத்தனை பூக்கள் இருந்தன? எத்தனை தவளைகள் இருந்தன?


17) இருமின்கம்பங்களிற்கிடையிலான தூரம் 15m ஆகும். இவ்வாறான 10 மின்கம்பங்களிற்கிடையிலான தூரம் எத்தனை m எனக் காண்க?

18) ஒரு மாமரத்தில் 60 குருவிகள் இருந்தன. ஒருவன் அவற்றை நோக்கிச் சுட்டபோது அவற்றுள் 2 குருவிகள்சூடுபட்டுக் கீழே வீழ்ந்தன. மீதமாக மரத்தில் எத்தனை குருவிகள் இருக்கும்?

19) 1 தொடக்கம் 99 வரையான ஒற்றை எண்களைக் கூட்ட வரும் எண் எத்தனையாவது சதுர எண்ணாகும்?

20) ஒரு மாலையைக் கட்டுவதற்கு கிரிக்கு 2 மணித்தியாலங்கள் எடுக்கும். அதேயளவு மாலையைக் கட்டப் பிரபாவிற்கு 3 மணித்தியாலங்கள் தேவை. இருவரும் சேர்ந்து அம்மாலையைக் கட்ட எவ்வளவு நேரம் எடுக்கும்?


21)




மேலுள்ள உருவில் 1 தொடக்கம் 9 வரையான எண்களை ஒருமுறை மட்டும் பயன்படுத்தி எந்த ஒரு பக்கத்திலுள்ள எண்களைக் கூட்டினாலும் 23 வருமாறு ஒழுங்கு செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) 1 தொடக்கம் 9 வரையான எண்களை சதுரம் ஒன்றிலுள்ள 9 கூடுகளிலும் ஒரு எண்ணை ஒரு முறை பயன்படுத்தி எப் பக்கத்தின் வழியே கூட்டினாலும், மூலைவிட்டங்கள் வழியே கூட்டினா லும் 15 வரும் வகையில் ஒழுங் கமைக்குக.





23) 1 தொடக்கம் 25 வரையான எண்களை சதுரம் ஒன்றிலுள்ள 25 கூடுகளிலும் ஒரு எண்ணை ஒரு தடவை மட்டும் பயன்படுத்தி கிடையாகவோ, நிலைக்குத்தாகவோ, மூலை விட்டம் வழியாகவோ, கூட்டும்போது 65 வரும் வகையில் ஒழுங்குபடுத்துக.

23) 

அருகிலுள்ள T வடிவ வயற் காணியை நான்கு சமவடிவங் களில் பிரித்துக் காட்டுக.

24) அருகிலுள்ள L வடிவில் அமைந் துள்ள வயற்காணியை நான்கு சம வடிவங்களாகப் பிரித்துக் காட்டுக.



25) 


ரூபா 1 நாணயங்கள் பத்து அருகேயுள்ள உருவிலுள்ள வாறு அடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் 3 நாணயங்களை மட்டும் இடம் மாற்றுவதால் எவ்வாறு தலை கீழாக இதே வடித்தை அமைக் கலாம்.

(விடைகளுக்கு 65ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைச் சிதறல்கள்

★ வசதி அதிகரிக்க அதிகரிக்கப் புத்திகெடும். ஆணவம் அதிகரிக்கும். ஆணவத்தின் வெற்றி தற்காலிகமானது. முடிவு அவலம் நிரம்பியது. எனவே வசதி அதிகரித்தாலும் பெரும் பதவி கிடைத்தாலும் நிலைமாறக் கூடியது.

★ ஆற அமரச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். அதேநேரம் காலம் பொன்போன்றது. முடிவெடுப்பதிற் கால தாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

★ தற்பொழுது எல்லோரும் எல்லாவற்றிலும் திருப்தியடைவ தில்லை. எனவே சில முடிவுகள் சிலருக்குப் பாதகமாக அமைந்துவிடும். நம்மால் இயன்றளவு நல்லது செய்ய வேண்டும். இரக்கம் பார்த்துப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றாமல் இருக்கக்கூடாது.

★ நாம் பிறர் சொல்வதைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஆராய்ந்து பாரத்து நமக்கு நாமே ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

★ நாம் யாரையும் வேண்டியவர் என்றோ, எதிரியாகவோ ஆக்கிக் கொள்ளக்கூடாது.

★ நம் கருத்தைப் பிறர்மீது திணிக்கக்கூடாது. பிறர் கூறுவதை யும் கேட்க வேண்டும்.

★ எக்காரணம் கொண்டும் பிறர்மீது பொறாமை கொள்ளக் கூடாது. பொறாமை நம் மனத்தில் இருப்பது நமக்கே தெரியாது.

★ பிறர் நம்மை நம்பும்படி நடந்துகொள்ள வேண்டும். நம்பிய வரை எக்காரணம் கொண்டும் நம்பிக்கை மோசம் செய்யக் கூடாது.

★ எக்காரணம் கொண்டும் எல்லாம் நமக்குத் தெரியும் என்றோ, பிறருக்கு ஒன்றும் தெரியாது என்றோ அகம்பாவம் கொள்ளக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ பிறரை உதாசீனப்படுத்தியோ, எடுத்தெறிந்தோ பேசக் கூடாது. எல்லோரும் ஆசாபாசங்கள் நிறைந்த மனிதர்களே.

☆ எக்காரணம் கொண்டும் வீட்டில் உள்ள கோபத்தை வெளியிற் காட்டக்கூடாது.

☆ தன்னைப் பற்றி "எல்லாம் எனக்குத் தெரியும்" என்று உயர்வாகவோ, 'எனக்கென்ன தெரியும்' என்று குறைவாகவோ பேசக்கூடாது.

☆ பணம் இருந்தும் பணிவாக இருப்பவன் உயர்ந்தவன். பலம் இருந்தும் பொறுமையாய் இருப்பவன் வீரன்.

☆ என்னதான் வசதியுடையவராக இருந்தாலும் அடுத்தவரை எள்ளி நகையாடுவதோ, அலட்சியப்படுத்திப் பேசவோ கூடாது. காலம் ஒரு நாள் மாறும்பொழுது அப்படிப் பேசுவோருக்கு அந்தநிலை வந்துவிடும்.

☆ எல்லாம் தெரிந்ததைப் போலப் பேசக்கூடாது. எல்லோரும் எல்லாம் தெரிவதில்லை. வாழ்க்கையின் இறுதிக்காலம் வரை நாம் கற்றுக்கொண்டேதான் இருக்கின்றோம். ஒவ்வொரு நாளும் ஒரு பாடம். ஒவ்வொருவரிடமும் ஒரு பாடம்.

☆ தன்னம்பிக்கையோடு பேசலாம். தற்பெருமையாகப் பேசக் கூடாது.

☆ வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அடுத்தவருக்கு உதவி செய்யவேண்டும். அப்படிச் செய்யும் உதவியை நாம் மறந்துவிட வேண்டும். நாம் உதவி செய்வதால் உதவி பெற்றவர் நமக்கு அடிமை என்று எண்ணக்கூடாது பிறர் நமக்குச் செய்யும் உதவியை நாம் மறக்கக்கூடாது. நன்றி மறப்பது நன்றன்று.

☆ பார்க்காமல் எதையும் பருகாதே. படிக்காமல் எதிலும் கையெழுத்துப் போடாதே.

☆ பணத்தைச் செலவழித்தல், மிச்சப்படுத்தல் இரண்டையும் செய்பவன் சந்தோஷமாக இருப்பான். ஏனென்றால் அவன் இரண்டையும் அனுபவிக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ எவனொருவன் குறைந்ததை வைத்துத் திருப்தி அடைகின்றானோ அவன்தான் மிகப் பெரிய செல்வந்தன். ஏனென்றால் திருப்திதான் இயற்கையின் செல்வம்.

★ ஓர் எட்டில் ஆடாத ஆட்டமும், ஈரெட்டிற் கல்லாத கல்வியும், மூவெட்டில் ஆகாத திருமணமும், நான்கெட்டிற் பிறக்காத பிள்ளையும், ஐயெட்டில் சேர்க்காத செல்வமும் ஆறெட்டிற் சுற்றாத ஊரம், ஏழெட்டில் எடுக்காத ஓய்வும், எட்டெட்டில் ஏற்படாத மரணமும் பயனற்றவை.

## விவேகக் கணிதத்திற்குரிய விடைகள்

01. வழி 1) $(99 \div 99) + 99 = 100$

2) $\frac{999 - 99}{9} = 100$

02. 1, 2, 3

03. $(11)^{11}$

04. 4 பேர் (தாய், தந்தை, மகள், மகள்)

05. 5 பிள்ளைகள் (5வது பெண் பிள்ளை)

06. 4 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகள்

07. இரண்டும் சம (1kg) நிறையுடையவை

08. 3நிமிடங்களே அதே நேரத்தில் எல்லா முட்டைகளும் அவிந்து விடும்.

09. 5 காலுறைகளை (4 வெவ்வேறு நிறமானதாக இருக்கலாம். 5வது நிச்சயம் முதல் நான்கிலும் ஒன்றாகவே இருக்கும்)

10. 5 மனிதர் ( 5 மனிதர் 1 மணித்தியாலயத்தில் 1 காரைக் கழுவுவர்)

11. (சேவல் முட்டையிடாது) எவருக்கும் இல்லை.

12. ரூபா 720 இல் 10% = ரூபா 72 இற்கு 8 முட்டைகள் பெறப்பட்டது. ஆகவே ஒருமுட்டையின் விலைரூபா 9 ஆகும்.

13. 1முறை பாய்வதால் ஏறம் தூரம் $= 3 - 1$
2 அடி
10தடவைகள் பாய்வதால்ஏறும் தூரம் $= 2 \times 10$
20 அடி
∴ 11ஆவது தடவை 3 அடி பாய்ந்து 23ஆவது அடியிலுள்ள நிலத்தை அடைந்துவிடும்.

14. 10 துண்டுகள் தேவை. முதல் 4 துண்டுகளைப் பொருத்தி ஒரு சிகரட்டும் பின் அதன் மீதித்துண்டையும் வேறு 3 துண்டுகளையும் பொருத்தி ஒன்றும் மேலும் அவ்வாறே செய்தால் 3 முழு சிகரட்டுகளாக்கிவிடுவான்.

15. ரூபா 300 போதும், தந்தையும், தாயும், மகனுமாக மூவர் மட்டுமே.


16. தவளைகள் - 4, பூக்கள் - 3

17. இரு தூண்களுக்கு இடைத்தூரம் = 15 m
∴ 10 தூண்களுக்கிடையிலான
தூரம் $= (10 - 1) \times 15 = 135m$

18. சுடப்பட்டதால் ஏனைய குருவிகள் அனைத்தும் பறந்துவிடும்.


19. 99 என்பது $\frac{(99 + 1)}{2} = 50$ வது ஒற்றை எண்ணாகும்.
∴ 1 தொடக்கம் 99 வரையான ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை $= 50 \times 50$
$= 2500$


20. கிரி 1 மணி நேரத்தில் கட்டுவது $= \frac{1}{2}$ பங்கு
பிரபா 1 மணிநேரத்தில் கட்டுவது $= \frac{1}{3}$ பங்கு
∴ இங்கு இருவரும் 1 மணி நேரத்தில் கட்டுவது
$= \frac{1}{2} + \frac{1}{3} = \frac{5}{6}$
∴ இருவரும் சேர்த்து கட்ட எடுக்கும் நேரம்
$1 \div \frac{5}{6} = \frac{6}{5} = 1\frac{1}{5}$ மணித்தியாலம்


21.


22.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

23.


24.


25.


1, 7, 10 ஆகிய இலக்க நாணயங்களை மட்டும் படத்திலுள்ளவாறு இடம்மாற்றி அமைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல

மீளாத துயரம், ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு! எமது தந்தை, குடும்ப விளக்கின் அனைவு. தீராத எங்கள் சோகத்தை தங்கள் அன்பான வார்த்தைகளால் தீர்க்க ஓடோடி வந்தோருக்கு எமது சிரம்தாழ்த்தி நன்றி சொல்கிறோம். கடல்கடந்து வாழ்கின்ற கருணையுள்ளங்களினதும் தூரதேசவாழ் அன்புள்ளங்களினதும் கடிதம் மூலமானதும், தொலைபேசி மூலமானதுமான அனுதாப உரையாடல்களுக்கும் என்றென்றும் நன்றிகள் பல. எமது குடும்பத் தலைவரின் இறுதி கிரியைகளிலும், அந்தியேட்டி வைபவத்திலும் பங்கு கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்கு எம்முடன் சேர்ந்து இறைவனை வேண்டி நின்ற அனைவருக்கும், இறுதி ஏற்பாடுகளை முன்நின்று தாமே செய்து முடித்து பேராதரவு வழங்கிய ஊரவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது வாழ்நாள் நன்றிகள். அன்றைய துக்க நாள் முதல் இன்றுவரை எம்முடன் இணைந்து சகலவிதங்களிலும் உதவிய பெரும் பண்பு கொண்டவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.


எமது சிரம்தாழ்த்திய நன்றிகள் யாவர்க்கும்!

இங்ஙனம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org